# கிறிஸ்துவின் வசனம்

# Word Of Christ





ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

# யாருக்கு ஐயோ!

1 தகப்பனை நோக்கி: என் ஜநிப்பித்தாய் என்றும், தாயை நோக்கி: என் பெற்றாய் என்றும்சொல்லுகிறவனுக்கு ஐயோ! ஏசா 45:10

2 குருடரான வழிகாட்டிகளே! உங்களுக்கு ஐயோ, மத்23:16

3 மரத்தைப்பார்த்து விழியென்றும், ஊமையான கல்லைப் பார்த்து எழும்பு என்றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ! ஆபகூக் 2:19

4 மாயைக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ! மத் 23:13

5 மந்தையைக் கைவிடுகிற அபத்தமான மேய்ப்பனுக்கு ஐயோ! சக 11:17

6 தன் அயலான் செய்யும் வேலைக்குக் கூலிகொடாமல், அவனைச் சும்மா வேலை கொள்ளுகிறவனுக்கு ஐயோ! எரே 22:14

7 தங்களையே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ! எசேக் 34:2

8 தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும், தங்களுடைய ஆவியின் ஏவுதலை பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்க தரிசிக்கு ஐயோ! எசேக் 13:3

9 என் மேய்ச்சலின் ஆடுகளைக் கொடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ! எரே 23:1

10 தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ

ஏசா : 5:20

# கிறிஸ்துவின் வசனம்

## WORD OF CHRIST

மரம் 4 ஜூன் 1996 கனி 11

## இது கடினமான உபதேசம்

### This is an hard Saying

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றின சீஷர்களில் அநேகர் அவருடைய உபதேசத்தைக் கேட்டு இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் யோ 6:60 என்றார்கள். இதைப்போல இன்றும் அநேக கிறிஸ்தவர்கள் அவருடைய உபதேசத்தில் நிலைத்திராமல் மிகவும்கடினமாகஇருக்கிறது என்றுசொல்லி அவரவருடைய இஷ்டப்படி கிறிஸ்துவின் உபதேசத்தை மாற்றி ஜீவித்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால் ஆண்டவர் இதைக் குறித்து பேசும்போது யோவ 8:31 ல் தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்-திருந்தால் மெய்யாகவே என சீஷராயிருப்பீர்கள் என்றார். உபதேசமென்றால் ஒரு சில காரியங்களைப் பின் பற்றுவது மட்டுமல்ல குறிப்பாக புது உடன்படிக்கையில் சொல்லபட்ட எல்லாமே அவருடைய உபதேசந்தான. இவையெல்லா-வற்றிலும் நிலைத்திருக்கும் போதுதான் நாம் அவருடைய சீஷர்களாயிருக்க முடியும்.

நமதாண்டவர் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை அப்பம்பிட்டு அவருடைய மரணத்தை நினைவுகூற வேண்டுமென்று மாதிரியை வைத்துப் போயிருக்கிறார். ஆனால் இன்றைய கிறிஸ்தவர்களில் பலர் சாக்குப் போக்குகளைச் சொல்லிக் கொண்டு அப்பத்தை அபாத்திரமாய் கைக் கொண்டு வருகிறார்கள். உலகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாரந்தோறும் அப்பம் பிட்காமல் மாதம் ஒரு முறை, வருடம் ஒருமுறை, நினைக்கும் போதெல்லாம் கைக்கொண்டு கிறிஸ்துவின் சரீரத்தை அசட்டை செய் கிறார்கள். காரணம், இது கடினமானது. ஒவ்வொருவாரமும் எப்படி தவறாது கைக்கொள்ள முடியும் என்று சொல்லி

தங்களுக்குத் தாங்களே போதகராயிருக்க விரும்புகிறார்கள் இதைக்குறித்து ஆண்டவர் யோவா 6:53,56 ல் நீங்கள் மனுச குமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலுமிருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லையென்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன் என்றார். ஆதிகிறிஸ்தவர்கள் இதிலே நிலைத்திருந்தாக அப் 2:42,20:7 லும் வாசிக்கின்றோம்.

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள் என்று மத் 7:13 ல் ஆண்டவர் உணர்த்துவதை கவனியுங்கள் இது கடினம் என்று சொல்லாதிருங்கள், ஏனென்றால் அது ஜீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். உங்களுக்குக் கடினமாய் தோன்றுகிற உபதேசம் உங்களை ஜீவனுக்குப் போகிற வாசல் வழியாக வழிநடத்தும்.

ஜெபிப்பதும், தேவனை துதிப்பதும் இன்று சிலருக்குக கடினமாய் தோன்றுகிறது. நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே அவைகளை அறிந்திருக்கிறாரே என்று சொல்லி ஜெபத்தில் அதிகமாய் தரித்திருப்பதில்லை தானி யேலுவுக்கு எதிராக கட்டளையிருந்தும் அவன் தினம் மூன்று வேளையும் தான் பண்ணும் விண்ணப்பத்தை தொடர்ந்து செய்து வந்தான். அவன் அதை கடினமாக எண்ணவுமில்லை, பயப்படவுமில்லை. கர்த்தர் அவனை விடுதலை செய்தார். பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டும் அவர்கள் அதைக் கடினமாக எண்ணவுமில்லை, பயப்படவும்மில்லை, கர்த்தர் அவர்களை விடுதலை செய்தார். நீங்களும் இவர்களைப் போல ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருக்கும் போது உங்களையும் கர்த்தர் விடுதலை செய்வது அதிக நிச்சயமல்லவா! சோர்ந்து போகாமல் ஜெபியுங்கள்.

ஆண்டவரையும் அவருடைய உபதேசத்தையும்

கடினமென்று ஒதுக்குவோமே என்றால் நியாயத்தீர்ப்புக்கு உள்ளாவோம். ஏனென்றால் யோவான் 12:48 ல் என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிற ஒன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் என்று சொல்கிறார். பிரியமான சகோதரனே! சகோதரியே! கிறிஸ்துவின் உபதேசத்தை கடினமென்று சொல்லி ஒதுக்காது முற்றிலும் கீழ்ப்படிந்து நடக்க முற்படுங்கள், கர்த்தர் உங்களை வழிநடத்திக் காப்பாராக!.

★ சபைச் செய்திகள்:

1. மே 16ம் தேதி வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையாரின் ஐக்கியக் கூட்டத்தில் மதுரை தெற்கு கிறிஸ்துவின் சபையாரும், திருநகர் விசுவாசிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அவ்வமயம் ஒரு சகோதரி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள்.

2. மே 18ம் தேதி வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையில் காங்கேயத்திலிருந்து வருகை தந்த சகோ. ராஜநாயகம் செய்தி கொடுத்தார்கள்.

3. மே 17,18 தேதிகளில் மதுரை ஆத்திகுளம் பகுதியில் இரண்டு நாள் சுவிசேஷக்கூட்டம் சகோ. A.S. ஜான் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு சகோ. P.K. சாமி பெங்களூர், சகோ. ஜெரிஞானசுந்தரம் இலங்கை ஆகியோர் தேவ செய்தி கொடுத்தார்கள்.

4. ஏப்ரல் 29 முதல் மே 4ம் தேதிவரை காங்கேயத்தில் V.B.S. வகுப்புகளை சகோ. ராஜநாயகம் ஏற்பாடு செய்திருந்தார். இதில் சகோ தானியேல் துரைராஜன் திருச்சி, சகோ. பிரபுதாஸ் மல்லி—கேத்தி, சகோ. பிலேமோன் ராஜா-மதுரை, சகோ. அர்ச்சுனன் வத்தலக்குண்டு ஆகிய ஆசிரியர்கள் தொடர் வகுப்புகளை நடத்தினார்கள். மாலையில் 2 நாள் சுவிசேஷக் கூட்டமும் சிறப்புடன் நடைபெற்றது. இவ்வமயம் 6 வாலிபர்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள்.

5. மே 14 ம் தேதி பாண்டிச்சேரியை சேர்ந்த சகோதரி அந்துவானேத், சகோதரி-சகாயமேரி ஆகிய இருவரும் கிறிஸ்துவுக்குக் கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். இவர்களை சபை ஊழியர் சகோ செங்கோல்ராயன் வழிநடத்தினார். இவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபியுங்கள்.

பெண்கள் பகுதி:

## உம்முடைய தேவன் என்னுடைய தேவன்
## Thy God My God

அன்பான சகோதரிகளே! இவ்விதழின் மூலம் மறுபடியுமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைந்து என் தேவனைத் துதிக்கின்றேன்.

ரூத் என்ற ஒரு மோவாபிய பெண்மணி நம்மையெல்லாம் தட்டியெழுப்பி, விழிப்படையச் செய்கிறாள் என்றால் அது மிகையாகாது என்று தான் கூறவேண்டும். அந்நாட்களில் அந்நிய தேவர்களுக்கு தலை வணங்கி வந்த இந்த ஸ்தீரி ஜீவனுள்ள தேவனைக் கண்டு கொண்டவளாய் உம்முடைய தேவன என்னுடைய தேவன் என்று தன் மாமி நகோமியைப் பார்த்து கூறுகிறாள் ரூத் 1:16. இது ஆச்சரியமல்லவா!. இவள, எப்படி தன் மாமியின் தேவனை தன் தேவனாக்கிக் கொண்டாள்?.

முதலாவதாக, ரூத் தன் மாமியோடு கூட தன் ஜன்ம தேசத்தை விடுட் புறப்பட்டாள். கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று மோவாப் தேசத்திலே கேள்விப்பட்டு, தன் மருமக்க-ளோடே கூட மோவாப் தேசத்திலிருந்து திரும்பி வரும்படி எழுந்து, தன் இரண்டு மருமக்களோடுங்கூடத் தானிருந்த ஸ்தலத்தைவிட்டுப் புறப்பட்டாள் என்று ரூத் 1:6,7ல் வாசிக்கின்றோம். அந்நிய தேசத்தில் அனைத்தையும் இழந்து வேதனையோடு தவித்துக் கொண்டிருந்த வேளையில் கர்த்தர் தம்முடைய ஜனத்தை சந்தித்து போஷிக்கிறார்

என்று கேள்விப்பட்டவுடனே ரூத் தானிருந்த தன் ஸ்தலத்தை விட்டு தன் மாமியோடு கூட புறப்பட்டாள். ஆம் சகோதரியே! நீங்களும் கூட ஒருவேளை தங்களை உண்டாக்கினவரை மறந்து அந்நிய தேவர்களுக்கு அடிமைப்பட்டு வேதனையோடு இருக்கலாம். இந்த ரூத்தைப் போல கர்த்தர் நல்லவர், போஷிக்கிறவர், காத்து இரட்சிக்கிறவர் என இப்பொழுது கேள்விப்படுகிற நீங்கள் உடனே தாமதம் செய்யாமல் இருக்கும் ஸ்தலத்தை விட்டு புறப்பட்டு, ஜீவனுள்ளவரிடத்துக்குத் திரும்புங்கள். கர்த்தர் நம்மை தம்முடைய ஜனமாக்கி ஆசீர்வதிக்க வல்லவராயிருக்கிறார்

இரண்டாவதாக, ரூத் தன் மாமியை விடாமல் பற்றிக் கொண்டாள். 1:14ல் வாசிக்கிறோம். அப்பொழுது நகோமி இதோ உன் சகோதரி தன் ஜனங்களிடத்தும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப் போய்விட்டாளே; நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ என்றாள் ரூத் 1:15 அதற்கு ரூத் தன் மாமியைப் பார்த்து நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மை விட்டுத் திரும்பி போவதைக்குறித்து என்னோடே பேச வேண்டாம என்று ரூத் 1:16ல் உறுதியாக கூறுகிறாள். இந்த ரூத் தன் மாமியை விடாமல் பற்றிக் கொண்டது போல் நாமும் கூட நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விடாமல் பற்றிக் கொள்வோம். கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளுகிற மனதை உடையவன் பாக்கியவான. முடிவுபரியந்தம் கிறிஸ்துவில் நிலைத்திருப்போம் நாம் அவரிடத்தில் கொண்ட நம்பிக்கையை விட்டு அசையாதிருப்போம். அவர் மூலமாக சகலமும் உண்டா-யிருக்கிறதே! உண்டாக்கினவரையே பற்றிக் கொண்டு பாக்கியவதிகளாய் விளங்குவோம்.

கடைசியாக, ரூத் கர்த்தரை தன் தேவனாக்கிக் கொண்டாள். ரூத் 1:16 ல் உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று கூறுவதைப் பார்க்கலாம. பிரிய சகோதரிகளே! நாமும் நம் மூத்த சகோதரி ரூத்தைப் போல் ஜீவனுள்ள தேவனை நம்முடைய தேவனாக்கிக் கொள்வதோடு கூட

ஜீவனுள்ள தேவனுடைய ஜனங்களையும் நம்முடைய ஜனங்களாக்கிக் கொள்வோம். இவர்கள் கிறிஸ்துவினுடையவர்களல்லவா? நாம் அறியாத ஜனங்களல்லவா? இவர்களை எப்படி நம்முடைய ஜனமாக்கிக் கொள்வது என திகைக்க வேண்டாம். கர்த்தரை தெய்வமாகக் கொண்டியிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது சங் 144:15. நாம் நம்முடைய பழைய வழிபாடுகளுக்கு விலகி, ஜன்ம பழக்க வழக்கங்களை விட்டு விட்டு, தேவனுடைய ஜனங்களோடு கூட கிறிஸ்துவை உறுதியாய் பற்றிக்கொண்டு, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் ரூத்தைப் போல் அடைக்கலம் புகுந்து நிறைவான ஆசிர்வாதம் பெறுவோம். கர்த்தர் ஒருவரே தேவன். இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் நம்முடைய தேவனாயிருப்பாராக!

சகோ. குளோரி அர்ச்சுனன்

★ மே மாத இதழின் விடைகள்:

1. பூமியிலிருந்து சங் 85:11
2. அதிக கசப்புள்ளவளென்று பிர 7;26
3. ஆவியென்னும் IIகொ 1:22
4. ஆதிமுதல் I யோ 3:8
5. யாக்கோபு ஆதி 35:4
6. யூதர்
7. யோனா
8. இல்லை
9. இரட்டிப்பான கனத்திற்குப்பாத்திரராக
10. தேவனுக்கு விரோதமான பாவம்

★ மே மாத வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்:

1. சகோதரி மேரிஎலிசபெத் கலைவாணி - வத்தலக்குண்டு
2. சகோதரி மேரியம்மாள் - ,,
3. சகோதரி மேரி - காஞ்சிகோவில்
4. சகோ. ஜெயக்குமார - காங்கேயம்

★ இம்மாத வேத அறிவுப் போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு விடை மட்டும் வேதத்திலிருந்து எழுதி இம்மாதம் 25ம் தேதிக்குள் அனுப்பவும்.

1 எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தவன் யார்?.

2 திரளான தண்ணீர்களின் இரைச்சலைப் பார்க்கிலும் கர்த்தர் உன்னதத்திலே எப்படியுள்ளவர்?

3 கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள் என்று யாருக்கு விரோதமாகப் பேசினார்கள்?

4 தேவன் நம்மை எதற்கென்று நியமிக்காமல் எதற்கென்று நியமித்தார்?.

5 பாவஞ் செய்கிற எவனும் அவரை என்னசெய்யவுமில்லை அவரை என்ன செய்யவுமில்லை?

6 பொன்னினால் இரண்டு கன்று குட்டிகளை உண்டாக்கி உங்கள் தேவர்கள் என்று சொல்லிய இராஜா யார்?

7 மாயவித்தைக்காரர்கள் சுட்டெரித்த புஸ்தகங்களின் தொகை எவ்வளவு?

8 அவருடைய நியாயத்தீர்ப்புகள் எப்படிப்பட்டது? அவருடைய வழிகள் எப்படிப்பட்டது?

9 நாம் யாருக்கென்று பிழைக்கிறோம், யாருக்கென்று மரிக்கிறோம்?

10 விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தியவர்கள் என்று பவுல் யாரை குறிப்பிடுகிறார்?.

★ ★ ★ ★ ★

MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST: Regd. No, 84661-92.
Registerd No TN/DDL/19.

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.

ஞாயிறு காலை 9-00
வியாழன் மாலை 6-45

கிறிஸ்துவின் சபை
2-2-102 D/5, காமராஜபுரம்
கணவாய்பட்டி ரோடு,
சப்ரிஜிஸ்டர் ஆபிஸ் சந்து
வத்தலக்குண்டு-624 202.

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது.

PRINTED MATTER

To

If undelivered please return to:

**THE EDITOR**

WORD OF CHRIST
Post Office Box No. 5.
Batlagundu-624 202.
S. India

Edited and published by B.Arjunan M.A., A.Bs., on behalf of church of Christ 2.2.102D/5 Kanavaipatti RoadBTL
Printed by C. Pandiyarajan B.Sc., SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624 202.